[17th August 1963

திரு. கே. ஏ. மதியழகன் : ஒவ்வொரு ஜில்லாவிற்கும் பிற்பட்ட வகுப்புகளுக்கு என்று இப்படி எல்லாம் ஒதுக்கப்பட்டிருப்பது போல் மந்திரிமார்களுக்கும் இவ்வளவு இடங்கள் என்று ஒதுக்கப் பட்டிருக்கிறதா ? அப்படியானால் அந்த இடங்களின் எண் ணிக்கை என்ன என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மந்திரிமார்களுக்கு என்று தனிப்பட்ட ஸீட்டுகள் ஒதுக்கப்படவில்லை. மந்திரிமார் கள் இதில் தலையிடுவதும் இல்லை.

கனம் சபாநாயகர் : மந்திரிமார்கள் காலேஜில் படிக்கப் போகி றார்களா என்ன ?

திரு. ஜே. மாதா கவுடர் : ஒரு மாணவன் பிஸிக்கல் ஸயன்ஸில் டி அல்லது டி ப்ளஸ் எடுத்து நாச்சுரல் ஸயன்ஸில் 'ஸி' எடுத்து விட்டால் விண்ணப்பம் செய்யக்கூட தகுதியில்லாதவராகி விடு கிறார். இப்படி டிஸ்டிங்க்ஷன் எடுத்த மாணவர் விண்ணப்பம் செய்த பின் பரிசீலனை செய்து முடிவு எடுப்பதில் என்ன இடைஞ் சல் இருக்கிறது ? வேறு மாநிலங்களில் இன்டர்வ்யூக்கு கூப்பிடு கிறார்களே, இதுபற்றி அரசாங்கம் பரிசீலிக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : செலக்ஷன் கமிட்டிக்கு ஓரளவு மார்க் ஒதுக்கப்பட்டிருக்கிறது, 'ஃபார் அதர் ஆக்டிவிட் டீஸ்'-க்கு என்று. இவற்றிற்கு, இச்சட்டத்திற்கு அபைட் ஆனால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

கனம் சபாநாயகர் : "'ஸி' எடுத்திருந்தாலும் அவர்களைக் கூப் பிட்டுக் கேட்டால் என்ன" என்று கேட்கிறார்கள்.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Only for Scheduled Castes and Scheduled Tribes and not for other Communities.

University at Madurai.

* 206 *Q.*-- SRI M. KAYYANASUNDARAM :
SRI K. CHEEMAICHAMY : } Will the Hon. the Minister for Finance be pleased to state with reference to Legislative Assembly Question No. 175 answered on 9th March 1963, the present stage of the proposal to start a University at Madurai ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : An Expert Committee under the Chairmanship of the Director of Public Instruction to go into the details relating to the establishment of a University at Madurai has been appointed.

திரு. கே. ஏ. மதியழகன் : கடந்த ஆண்டு நம் கல்வி அமைச்சர் அவர்கள் மதுரை பல்கலைக் கழக மசோதாவை இந்தாண்டு நிதி நிலை அறிக்கைக்கு முன்னால் இந்த சபையில் கொண்டு வருவ தாகச் சொன்னார்கள். வருகிற நிதி நிலை அறிக்கைக்கு முன்பாகவா

17th August 1963]

வது வருகிற புது மந்திரிசபையில் உள்ள கல்வி அமைச்சர் அவர்கள் மதுரை பல்கலைக் கழக மசோதாவைக் கொண்டு வந்து அது விரைவாக நடைபெறுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சென்ற ஆண்டு கொண்டு வராததற்குக் காரணம் நெருக்கடி நிலைதான். இந்த ஆண்டு யூனிவர்சிட்டி கிரான்ட்ஸ் கமிஷன் கூட இதற்கு அங்கீகாரம் அளித்திருக்கிறார்கள். கமிட்டி பரிசீலனை செய்த பிறகு சட்டம் கொண்டு வருவது பற்றி எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. வை. சங்கரன் : எப்போது ஆரம்பிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது ? நிதிநிலை சம்பந்தமாக கமிஷன் எவ்வளவு கொடுப்பார்கள் ? மற்றவர்கள் யார் யார் எவ்வளவு கொடுப்பார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எல்லாம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி : மதுரையில் ஏற்பட்டிருக்கும் இந்த யூனிவர்சிட்டிக்கு உள்ள அதிகார வரம்பு என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுவும் குழுவின் பரிசீலனையில் இருக்கிறது.

மதுரையில் உள்ள அரிசன மாணவர் விடுதி

*207 கேள்வி.—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரையில் கட்டப்பட்டுள்ள அரிசன மாணவர்களின் விடுதியில் எத்தனை இடங்கள் மற்ற வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்டுள்ளன ?

(இ) இவ்வாறு மற்ற வகுப்பு மாணவர்களுக்கு இடம் ஒதுக்க வேண்டிய அவசியம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) மதுரையிலுள்ள அரசாங்க மாணவர்கள் ஹாஸ்டலில் உள்ள மொத்த இடங்களில் முன்னேறிய வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்களுக்காக 15 சதவிதம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(இ) தீண்டாமையை ஒழிப்பதற்காகவும் ஹரிஜன மாணவர்கள் தனியாக ஒதுக்கப்படுவதைத் தவிர்க்கவும், ஹரிஜன நலத்துறை நடத்தி வருகிற அரசாங்க ஹாஸ்டல்களில் முன்னேறிய வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

(*a*) Fifteen per cent of the total number of seats are reserved for advanced communities in the Government Boy's Hostel at Madurai.

(*b*) With a view to eradicate untouchability and to avoid segregation of Harijans, a limited number of seats are reserved for students belonging to advanced communities in the Government Hostels maintained by the Harijan Welfare Department.